உ

# முருகர் அருள்வாக்கு

## முருகர் அருள்வாக்கு என்றால் என்ன?

உங்கள் மனத்தில் உள்ள பல கேள்விகளுக்கு / சங்கடங்களுக்கு கடவுள் தீர்வு கூறுவார். அருள்வாக்கில் உங்களுக்கு மனமகிழ்ச்சி தரும் விபரங்கள் மட்டும் கூறுவார், துன்பம் தரும் எந்த விபரமும் நேரிடையாக கூறமாட்டார்.

அதற்கு பதிலாக சில அவசியமான பரிகாரங்களை கூறுவார். பரிகாரங்கள் உங்களால் மிக எளிதாக செய்ய கூடியதாக மட்டும் இருக்கும். அதனை செய்வதனால் உங்கள் மகிழ்ச்சி பெறுகும்.

## முருகர் அருள்வாக்கு கேட்க என்ன செய்ய வேண்டும்?

அருள்வாக்கு கேட்க வரும் தினம் புலால் உணவை தவிர்க்க வேண்டும். தூய்மையான உடல் மற்றும் மனத்துடன் உங்கள் இஷ்ட தெய்வத்தை வணங்கி பிறகு அருள்வாக்கு கேட்க வரவேண்டும்.

உங்கள் அணு அளவு அசைவையும், எல்லா எண்ண ஓட்டங்களையும் கடவுள் நன்கு அறிவார்.

அருள்வாக்கு தினத்தன்று நெய்வேலி, சேப்பளாநத்தம் அருகில் உள்ள கீழ்பாதி, ஸ்ரீ செல்வமுத்துகுமாரசாமி சித்தர் பீடம் வந்து* வரிசையில் அமருங்கள், உங்கள் முறை வந்த உடன் அமைதியாக கடவுள் கூறும் விபரங்களை முழுமனதுடன் பொறுமையாக கேட்கவும் பின்னர் உங்களுக்கு வேறு எதேனும் விபரங்கள் தேவைபட்டால் அவைகளை கேட்டு தெளிவு பெறவேண்டும்.

அருள்வாக்கு ஒரு சில தினங்களில் முன் அறிவிப்பின்றி ரத்து செய்யபடலாம் ஆகையால் அருள்வாக்கு கேட்க வரும் பக்தர்கள் அருள்வாக்கு அன்றைய தினம் அருள்வாக்கு உண்டு என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டியது அவசியம். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் : **91507 42645.**

**அருள்வாக்கு முற்றிலும் இலவசம். நீங்கள் அளிக்கும் காணிக்கை முழுவதும் அன்னதான நன்கொடையில் சேர்க்கபடும்.**

* அருள்வாக்கு செவ்வாய் மற்றும் வெள்ளிகிழமைகளில் காலை **10:00** மணி முதல் **12:00** மணி வரை மாலை **6:00** மணி முதல் **8:00** மணி வரை.

## முருகர் அருள்வாக்கில் என்ன கூறுவார்?

அவர் கூறும் அருள்வாக்கு முழுமையாக உங்களுக்கு மட்டும் உங்களை பற்றி மட்டும் என்பதனை உனர்த்த உங்கள் கடந்த கால நல்ல நிகழ்வுகளை உங்களுக்கு நினைவு கூறுவார். நீங்கள் எதற்காக அங்கு வந்தீர்கள் என்றும் கூறுவார் பிறகு உங்கள் மனத்தில் உள்ள பல கேள்விகளுக்கு / சங்கடங்களுக்கு முருகர் தீர்வு கூறுவார். அது வரை நீங்கள் ஒரு வார்தையும் பேச கூடாது, அவர் கூறும் விபரங்களை முழுமனதுடன் பொறுமையாக கேட்கவும்.

பெறும்பாலான உங்கள் எண்ணங்களுக்கு பதில் கிடைத்து விடும், அப்படி கிடைக்கவில்லை என்றால் உங்களுக்கு மிகவும் அவசியமானது என்று நீங்கள் முன்கூட்டியே முடிவு செய்துள்ள ஓரிரு கேள்விகளை மட்டும் கேட்கவும்.

முருகர் பதில் கூறாத சில கேள்விகளுக்கு பதில் கூற திரும்ப கேட்க வேண்டாம். அதற்கு பதில் உங்களின் அடுத்த முறை அருள்வாக்கு வரும்போது கிடைக்கலாம்.

அருள்வாக்கில் எதேனும் பரிகாரம் செய்ய சொன்னால் அதனை உடன் குறிப்பு எழுதி வைத்து தவறாமல் அதனை செய்து முடிக்கவும். பரிகாரங்கள் உங்களால் மிக எளிதாக செய்ய கூடியதாக மட்டும் இருக்கும். அதனை செய்வதனால் உங்கள் மகிழ்ச்சி பெறுகும்.

அருள்வாக்கு முடியும் பொழுது இறைவனின் எல்லைஇல்லா அன்பை முழுமையாக உணர்வீர்கள்.